செ.வெ.எண்.76/ஜூலை நாள் :31.07.2018

**பத்திரிக்கை செய்தி**

**தனியார்துறை நிறுவனங்களும் - தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள அனைத்து வகை பதிவுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்**

**வருகின்ற 02.08.2018 அன்று (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தகவல்**

தனியார் துறை நிறுவனங்களும் - தனியார் துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் நேரடியாக சந்திக்கும் ”வேலைவாய்ப்பு முகாம்” ஒவ்வொரு வாரமும் தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட்டு - 2018 மாதத்தின் முதல் வாரத்திற்குரிய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமானது வருகின்ற 02.08.2018 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் சென்னையைச் சார்ந்த TVS நிறுவனத்தினர் தங்களுக்குத் தேவையான ஆட்களை கீழ்க்கண்ட விவரப்படி தேர்வு செய்ய உள்ளனர்.

| வ.எண். | பணியின் பெயர் | கல்வித் தகுதி | பணிக்காலியிடங்களின் எண்ணிக்கை | மாத சம்பளம் |
|---|---|---|---|---|
| 01 | கிளார்க் | 10ம் வகுப்பு | 100 | ரூ.11,500/- |
| 02 | லிப்ட் ஆபரேட்டர் | 12ம் வகுப்பு | 100 | ரூ.11,500/- |
| 03 | இரண்டு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகன தொழில்நுட்ப உதவியாளர் | ஐடிஐ | 100 | ரூ.12,500/- |
| 04 | அசெம்ப்ள் பிரிவு | டீப்ளமோ | 100 | ரூ.16,500/- |

இது ஒரு இலவசப்பணியே ஆகும். இதன் மூலம் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு பதிவு ரத்து செய்யப்படமாட்டாது. அரசுத் துறைகளில் அவர்களது பதிவு மூப்பின்படி நேர்முகத் தேர்வு அனுப்பப்படும். எனவே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள நபர்கள் தனியார் துறையில் வேலைக்கு சென்றால் தங்களது பதிவு ரத்து செய்யப்பட்டு விடுமோ என்று அச்சப்பட வேண்டியதில்லை.

ஆகவே, மேற்படி பணிகளுக்கு தகுதியும், விருப்பம் உள்ள நபர்கள் அனைவரும் வருகின்ற 02.08.2018 அன்று (வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**